1974 மார்ச் 6]

2. மருந்தக அளவில் நோயாளிகளுக்குச் சிகிச்சை திறமையாகச் செய்யப்பட்டது. இவ்வகைக் காய்ச்சலால் அவதி யுறுவோரின் எண்ணிக்கை உறுதியாகக் குறைந்துவிட்டது.

3. சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகள், மருந்தகங் களில், சிகிச்சை பெற வந்தோர் கணக்குப்படி "டிங்கு" காய்ச்சலும், "டிங்கு" வகைக் காய்ச்சலும் மிகச் சொற்ப அளவில், அதாவது, ஏறத்தாழ வாரத்துக்கு ஒருவருக்குக் கண்டது. அது கொள்ளைநோயாகப் பரவவில்லை.

4. கொசுக்கள் உற்பத்தியாவதைக் கட்டுப்படுத்தல், பொது மக்களுக்கு உடல்நலக் கல்வியறிவைப் புகட்டுதல் போன்ற முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டது.

5. "டிங்கு" காய்ச்சல் கொள்ளை நோய்போல் பரவும் சாத்தியக் கூறுகள் இருக்குமாயின், அதுபற்றி விழிப்புடன் கவனித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு தன் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவ மனைகளின் தலைவர்களுக்கு மருத்துவக் கல்வித் துறை இயக்குநர் உத்தரவிட்டார்.

இணைப்பு II

247-ம் பக்கத்தில் 299 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

ஈரோடு வட்டம் சென்னிமலை பிர்காவிலுள்ள முத்துகவுண்டன் வலசு, புங்கம்பாடி, பரவலசு, ஊமைலாடி, கவுண்டன்பாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள அரிசன மக்களுக்கு குடிநீர்வசதி அளிக்க அரசால் எடுக்கப்பட்ட விவரங்களை காட்டும் விவர அறிக்கை.

(1) முத்துகவுண்டன் வலசு கிராம அரிசனங்களுக்கு குடிநீர் வசதி அளித்தல்.

முத்துகவுண்டன் வலசு கிராம அரிசன மக்களுக்கு ஏற்கனவே ஒரு குடிநீர் கிணறு உள்ளது.

[1974 மார்ச் 6

(2) புங்கம்பாடி கிராம அரிசனங்களுக்கு குடிநீர் வசதி அளித்தல்.

புங்கம்பாடி கிராம அரிசனங்களுக்கு ஒரு பக்கா குடிநீர்க் கிணறு உள்ளது. ஆனல் குடிநீர் கடுத்து இருக்கும். ஆகையால், அந்த அரிசன மக்கள் அவர்களாலேயே தோண்டப்பட்ட ஒரு சிறிய குழியிலிருந்து குடிநீர் எடுத்து வருகிருர்கள். ரூ. 3,000 மதிப்பீட்டுச் செலவில் இந்த குழியை இந்த வருடம் செப்பனிடு வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானித்துள்ளார்.

(3) பரவலசு கிராம அரிசனங்களுக்குக் குடிநீர் வசதி அளித்தல்.

பாசனக்கிணறுகளிலிருந்து பரவலசு கிராம அரிசனங்கள் தற்போது குடிநீர் எடுத்து வருகிருர்கள். அவர்களுக்காக ரூ. 5,000 மதிப்பீட்டில் ஒரு குடிநீர்க் கிணறு தோண்டும் வேலை சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தினல் ஏற்கனவே எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது.

(4) மயிலாடி கிராம அரிசனங்களுக்கு குடிநீர் வசதி அளித்தல்.

மயிலாடி கிராம அரிசனங்களுடைய உபயோகத்திற்கு ஏற்கனவே ஒரு குடிநீர் கிணறும், குழிக்கிணறும் இருக்கின்றன. மயிலாடி அருகே ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத்தொட்டி அமைப்பதற்கும் மயிலாடி அரிசனங்களுக்கு அந்த மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டியிலிருந்து குழாய்த் தொடர்பு அமைப்ப தற்கும், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் தீர்மானித்திருக்கின்றது.

(5) கௌண்டன்பாளையம் கிராம அரிசனங்களுக்கு குடிநீர் வசதி அளித்தல்.

கௌண்டன்பாளையம் கிராம அரிசனங்கள் தற்போது தோட்டக் கிணறுகளிலிருந்து குடிநீர் எடுத்து வருகிருர்கள். ஆகையால் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் இந்த வருடம் ரூ. 3,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு குடிநீர் கிணறு வசதி அளிக்கும் வேலையை எடுத்துள்ளது.

1974 மார்ச் 6]

Statement showing the steps taken by the Government to supply drinking water for Harijans in Muthugoundenvalasu, Pungambadi, Paravalasu, Myladi, Goundenpalayam in Chennimalai Firka of Erode Taluk :

(1) Provision of drinking water facilities to the Harijans at Muthugoundenvalasu :

There is already a drinking water well exclusively for Harijans in Muthugoundenvalasu.

(2) Provision of drinking water facilities to the Harijans in Pungambadi :—

There is a pucca drinking water well for the Harijans. But the water is brackish. The Harijans are, therefore, taking water from a small pit excavated by themselves. The Collector has proposed to improve the pit at a cost of Rs. 3,000 during this year.

(3) Provision of drinking water facilities to the Harijans in Paravalasu.

The Harijans in Paravalasu are now taking water from irrigation wells. The work of sinking a drinking water well for their benefit at an estimated cost of Rs. 5,000 has already been taken up by the Panchayat Union, Chennimalai during this year.

(4) Provision of drinking water facilities to the Harijans in Myladi.

There is already a good drinking water well, as also a well pit for the use of the Harijans in Myladi. The Panchayat Union, Chennimalai has also resolved to put up an Over Head Tank near Myladi and to lay pipeline connections from the Over Head Tank to provide drinking water to the Harijans in Myladi.

(5) Provisions of drinking water facilities to the Harijans in Goundenpalayam.

The Harijans in Goundenpalayam are now taking water from the near-by Garden wells. The Panchayat Union, Chennimalai has, therefore, taken up the work of providing a drinking water well at an estimated cost of Rs. 3,000 during the year.